பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 29 திங்கட்கிழமை 13.07.2020 கதிர் 117

# கொரோனா வேகமெடுப்பதால் பிரசாரத்தை உடனே நிறுத்துக!

**ஜனாதிபதியிடம் சுகாதாரப் பிரிவு கோரிக்கை**

கொழும்பு, ஜூலை 14

கொரோனா வைரஸ் மீண்டும் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதால் தேர்தல் பிரசார நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு சுகாதாரப் பிரிவினர் ஜனாதிபதியிடம் அறிவித்துள்ளனர்.

தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் சுகாதாரச் சட்டத்திட்டங்கள் மீறப்படுவது அவதானிக்கப்பட்டமையே இதற்குக் காரணமாகும். பிரசாரக் கூட்டங்களுக்கு உரிய எண்ணிக்கையை விடவும் அதிக மக்கள் வருவது வைரஸ் மேலும் பரவக் காரணமாகிவிடும் எனச் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. 2

## நாட்டை மீண்டும் மூட நேரிடலாம்!

**அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசுக்கு எச்சரிக்கை**

கொழும்பு, ஜூலை 13

கொரோனா வைரஸ் தொற்றிய நபர்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களை 2

## இரத்தினபுரியில் 3 கொரோனா தொற்றாளர்கள்!

கொழும்பு, ஜூலை 14

இரத்தினபுரிமாவட்டத்தில்கொரோனா வைரஸ் தொற்றுடன் மூன்று பே 2

# எக்காரணம் கொண்டும் தேர்தலை பின்தள்ளாதீர்!

**மஹிந்த அணியினர் விடாப்பிடி**

கொழும்பு, ஜூலை 13

எந்த காரணத்தைக் கொண்டும் பொதுத்தேர்தலை மீண்டும் ஒத்தி வைக்கக்கூடாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுதிபடத் தெரிவித்துள்ளது. 2



## பொலிஸ் பரிசோதகர் கைதானார்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சந்தேகத்தின் பேரில் பொலிஸ் பரிசோதகர் அபுபக்கர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இன்று அதிகாலை, அக்கரைப்பற்றிலுள்ள அவரது வீட்டில் வைத்தே, கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற காலத்தில், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் அபுபக்கர் கடமையாற்றியுள்ளார். 2

## தபால்மூல வாக்களிப்பு இன்று முதல் ஆரம்பம்

இம்முறை பொதுத்தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று ஆரம்பமாகியது.

இதனடிப்படையில், இன்று அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக ஊழியர்களுக்கும் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. 2


**கொரோனா ஆபத்து;**

## ரயில் நிலையம் தற்காலிக பூட்டு

கொழும்பு, ஜூலை 13

உனவட்டுன ரயில் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

(விரிவான செய்தி 8ஆம் பக்கத்தில்)




## கந்தக்காடு நிலைமை கட்டுப்பாட்டில் வரும்!

**இராணுவத் தளபதி உறுதி**

கொழும்பு, ஜூலை 13

கந்தக்காடு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடிய சூழ்நிலை காணப்படுவதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இன்று திங்கட்கிழமை தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பாகிய நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். 2

**பொலனறுவையிலிருந்து**

## யாழ்.வந்த ஒருவருக்கு கொரோனா அறிகுறி!

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணத்துக்குத் தொழில் நிமித்தம் வந்திருந்த பொலனறுவை சேர்ந்த ஒருவர் கொரோனா அறிகுறியுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் 2

## மஹிந்த தேசப்பிரிய இன்று மன்னாருக்கு திடீர் விஜயம்



மன்னார், ஜூலை 13

தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய இன்று திங்கட்கிழமை காலை மன்னாருக்குத் திடீர் விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது மன்னார் மாவட்ட தேர்தல் அலுவலகத்துக்குச் சென்ற அவர் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஜே.ஜெனிற்றனுடன் கலந்துரையாடினார். 2

## கந்தக்காடு நிலைமை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவிக்கையில் -
கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்திலுள்ள கைதிகளைப் பார்வையிடவென 116 பேர் இதுவரை வருகை தந்திருந்தனர்.
அவர்கள் அனைவரும் வெவ்வேறு பகுதிகளில் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அந்த அனைவரும் பயணித்துள்ள இடங்கள் அனைத்தும், இந்த வாரத்துக்குள்ளேயே அடையாளம் கண்டு கொள்ள முடியும். ஆகவே கந்தக்காடு நிலைமையை விரைவாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் - என்றார்.

## யாழ்.வந்த ஒருவருக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எழுவைதீவில் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் கடந்த சனிக்கிழமையே பொலனறுவையிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்தார்.
கொரோனா அறிகுறிகளுடன் எழுவைதீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், தற்போது அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.
அவரிடம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, இன்று இரவு பரிசோதனை முடிவு வெளியாகும். பரிசோதனை முடிவுகள் வெளியாகும் வரை அவருடன் தொடர்புடையவர்கள் எழுவைதீவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## தபால்மூல வாக்களிப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எவ்வாறாயினும், ராஜாங்கனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட தபால் மூல வாக்களிப்பு மாத்திரம் பிற்போடப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
நாளை மற்றும் நாளை மறுதினம், இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள், விவசாய-கல்விகாரியாலயங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் பணியாற்றும் அரச ஊழியர்கள் தபால் மூல வாக்களிப்பை மேற்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.
16 ஆம், 17 ஆம் திகதிகளில் முப்படையினர், பொலிஸ் திணைக்கள அதிகாரிகள், மாவட்ட செயலக அதிகாரிகள் ஆகியோர் வாக்களிக்க முடியும்.
கொரோனா தொற்றுக் காரணமாக சுய தனிமைப்படுத்தல் அல்லது தனிமைப்படுத்தல் மத்தியநிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டோரில் அரச ஊழியர்களும் உள்ளடங்குவதால் தபால் மூல வாக்களிப்பில் சற்று சிக்கல் உள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய கூறியுள்ளார்.
எவ்வாறாயினும், இந்தச் சிக்கலுக்கும் தீர்வை வழங்கும் வகையில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் மாற்று யோசனைகள் காணப்படுகின்ற எனவும் அவற்றை அமுல்படுத்த எதிர்பார்ப்பதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
சுய தனிமைப்படுத்தலில் உள்ள தபால்மூல வாக்காளர்கள், மாலை 4 மணி தொடக்கம் 05 மணி வரையான காலப்பகுதியில் வாக்களிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.
இதனிடையே, தபால்மூல வாக்களிப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளில் சுமார் ஆயிரம் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த எதிர்பார்த்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கூறியுள்ளார்.

## பொலிஸ் பரிசோதகர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்போது அம்பாறை பொலிஸ் போக்குவரத்துப் பிரிவில் அவர் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி வருகிறார்.
இந்நிலையிலேயே குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் அவரை இன்று கைது செய்துள்ளனர்.

## எக்காரணம் கொண்டும் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனா வைரஸ் தொற்று பரவலைக் காரணம் காட்டித் தேர்தலை ஒத்திவைக்கும் தேவை எதிர்க்கட்சிகளுக்கு இருப்பதாக அமைச்சரும், பொதுஜன பெரமுனவின் குருநாகல் மாவட்ட முதன்மை வேட்பாளருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறியுள்ளார்.
எதிர்க்கட்சிகள் பிளவுபட்டுள்ளமையால், அவர்கள் தேர்தலை ஒத்திவைக்க முயற்சித்து வருகின்றனர். எனினும் எந்தக் காரணத்தைக் கொண்டாவது தேர்தல் ஒத்திவைக்கப்படுவதை எதிர்க்கின்றோம் எனவும் ஜோன்ஸ்டன் குறிப்பிட்டார்.
அதேவேளை, கொரோனா அல்லது வேறு காரணங்களின் அடிப்படையில் பொதுத்தேர்தலை ஒத்திவைக்கக்கூடாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் தெரிவித்துள்ளார்.
சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றி, அரசியல்வாதிகளையும், மக்களையும் பாதுகாத்து தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நாமல் கோரியுள்ளார்.
கொரோனா வைரஸ் பாதிப்பு மீண்டும் அதிகரித்துள்ளதை அடுத்து, தேர்தலை ஒத்திவைக்கவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டை மீண்டும் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
'அடையாளம் கண்டு, அந்த பிரதேசங்களுக்குச் செல்ல கட்டுப்பாடுகள் விதிக்கப்படவேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் சேனால் பெர்னாண்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.
தற்போதைய சந்தர்ப்பத்தில் சரியான தீர்மானங்களை எடுக்காது போனால், நாட்டை மீண்டும் மூட நேரிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதனால், நாடு அப்படியான இடத்துக்கு மீண்டும் செல்வதைத் தவிர்க்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான யோசனைகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இன்று கையளிக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## இரத்தினபுரியில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனச் சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கபிலா கன்னங்கரா உறுதிப் படுத்தியுள்ளார்.
இவர்கள் மூவரும் கந்தக்காடு மறுவாழ்வு மையத்தில் பணியாற்றி வருகின்றவர்களெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதன் காரணமாக இவர்களுடன் நெருங்கி பழகிய சுமார் 60 பேர் இதுவரை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.
இவர்கள் இரத்தினபுரி, தேவாலயாகவா, குருவிட்ட மற்றும் எஹெலியகொட தோரனகொட பகுதிகளில் இருந்து பதிவாகியுள்ளனர்.
இதன்போது தொற்றுக்குள்ளான ஒருவர் இரத்தினபுரியில் உள்ள சீவாலி மற்றும் அலோசியஸ் பாடசாலைகளுக்குச் சென்று வந்துள்ளார் என்றும், இதன் காரணமாக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மஹிந்த தேசப்பிரிய ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதனைத் தொடர்ந்து எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பெண்களுக்கான வாக்கு வீத அதிகரிப்பை ஊக்குவிக்கும் வகையில் இடம்பெற்ற வீதி நாடகத்தில் தேர்தல் ஆணையாளர் கலந்துகொண்டார்.
அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக இந்த வீதி நாடகம் இடம்பெற்றது.

# சுதந்திரமான - நீதியான தேர்தலை நடத்தப் பொலிஸார் நடவடிக்கை

## யாழ். வந்த அஜித் ரோகண தெரிவிப்பு



(எஸ். நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஜூலை 13
தேர்தல் திணைக்களத்துடன் இணைந்து சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று கொரோனா கட்டுப்பாட்டு செயலணியின் பிரதிநிதி பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்தார்.
இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அவர், ஊடகவியலாளர் சந்திப்பையும் நடத்தினார். அதன்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.
எனவே அந்த நிலையிலும் எவ்வாறு தேர்தலை நடத்துவது என்பது தொடர்பில் நாம் பல முன்னெடுப்புக்களை மேற்கொண்டுஉள்ளோம். அதாவது தனிமைப்படுத்தல் சட்டம் சுகாதார நடைமுறைகள் போன்ற பல்வேறுபட்ட விடயங்களை பின்பற்றி எதிர்வரும் தேர்தலை நடத்த நாங்கள் முயற்சிக்கின்றோம்.
அதேபோல் தேர்தல் திணைக்களமும் பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. எனவே அனைவரின் ஒத்துழைப்போடும் குறிப்பாக பொதுமக்களின் ஒத்துழைப்பு இந்த விடயத்தில் மிகவும் முக்கியமானது.
அதாவது அனைவரும் முகக்கவசம் அணிந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்வதை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அதேபோல் சுகாதாரத் திணைக்களத்தின் சுகாதார நடைமுறைகளை நீங்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்பது எமது கோரிக்கையாக இருக்கிறது.
அதேபோல் தேர்தல் முறையில் எவர் ஈடுபட்டாலும் அது சட்டத்துக்குரிய குற்றம் ஆகும். எனவே அது எவராக இருந்தாலும் தேர்தல் வன்முறையுடன் சம்பந்தப்பட்டு எமக்கு முறைப்பாடு வழங்கப்படும் இடத்து அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

# சந்தைகள், தேர்தல் கூட்டங்கள் மிக மிக ஆபத்தான இடங்கள்!

## தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் கடுமையான எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 13
போக்குவரத்துச் சேவைகள், வர்த்தக சந்தைகள் மற்றும் தேர்தல் கூட்டங்களில் தனிநபர் இடைவெளியை பேணுவது மிகவும் பலவீனமான நிலையில் இருப்பதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.
தனிநபர் இடைவெளியைக் கவனத்தில் கொள்ளப்படாத நிலைமையை காணக் கூடியதாக இருப்பதாகவும் இது மிகவும் மோசமான கட்டம் எனவும் அவர் கூறியுள்ளார்.
இவ்வாறான இடங்களில் கொரோனா நோயாளர் ஒருவர் இருந்தார் என்றால், பலருக்கு நோய் பரவும் ஆபத்து இருக்கின்றது. அந்த இடங்களில் இருந்தவர்களைப் பின்னர் கண்டறிவது மிகவும் கடினமானது.
இதனால், தனிநபர் இடைவெளியைப் பேணி, சன நடமாட்டம் உள்ள இடங்களுக்குச் செல்லும் போது முகக்கவசங்களை அணிவது மற்றும் கைகளை கழுவுவது மிகவும் முக்கியமானது.
இந்தச் சந்தர்ப்பத்தில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது போனால், அது பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதுடன் இவ்வாறான நிலைமையில் கடந்த சில மாதங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளை மீண்டும் அமுல்படுத்த நேரிடும். இது மீண்டும் மக்களின் இயல்பு வாழ்க்கையை பின்நோக்கித் திருப்பும்.
தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள நிலைமையானது இரண்டாவது அலையாக பரவும் ஆபத்து இருந்தாலும் நிலைமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அடையாளம் காணப்படாத நோயாளி மற்றுமொரு இடத்தில் இருந்தால், அது இரண்டாவது அலை உருவாக்கும் ஆபத்துக் காணப்படுகிறது.
இதன் காரணமாக நாடு முழுவதும் உள்ள மக்கள் சுகாதார பாதுகாப்பு முறையை கடைபிடிக்க வேண்டியது அத்தியவசியமானது எனவும் சுதத் சமரவீர வலியுறுத்தியுள்ளார்.

## கொரோனா ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அனைத்து பிரதான கூட்டங்களையும் தற்காலிகமாக நிறுத்துவதற்கு கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

## 178 இலங்கையர்கள் தாயகம் திரும்பினர்

*கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மாலைதீவில் சிக்கியிருந்த 178 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.*
*ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விசேட விமானத்தின் மூலம் அவர்கள் இன்று திங்கட்கிழமை காலை மத்தளை விமான நிலையத்தை வந்தடைந்தனர்.*
*இவ்வாறு நாடு திரும்பிய அனைவருக்கும் பீ.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, முடிவுகள் வெளியாகும் வரை அவர்கள் ஹோட்டல்களில் தங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*
*இதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதால், நாளை முதல் வெளிநாட்டிலிருந்து இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளதாக அரசு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முக்கிய தீர்மானம் எடுக்கும் கட்டத்தில் தேர்தல் ஆணையம்

"அஞ்சுவது அஞ்சாமை பேதமை" என்றான் வள்ளுவன்.

உலகமே அஞ்சிக் கிடக்கும் கொரோனா வைரஸ் தொடர்பில் வழமை போல சண்டித்தனம் காட்டுகின்றார்கள் நம்மூர் அரசியல்வாதிகள்.

அவர்கள்தான் அப்படிச் செய்கின்றார்கள் என்று பார்த்தால் தேர்தல் ஆணையப் பக்கத்திலிருந்தும் அது போலவே பொறுப்பின்றிச் செய்திகள் வருவது பெரும் விசனத்துக்குரியது.

தேர்தலை நடத்துவதற்கும், தேவைப்பட்டால் ஒத்திவைப்பதற்கும் தேர்தல் ஆணையத்துக்குக் கட்டுமட்டில்லாத அதிகாரத்தை 19 ஆவது திருத்தம் தந்து நிற்கின்றது.

இந்த அதிகாரம் அரசியல் ரீதியாக முடிவெடுப்பதற்கு வழங்கப்பட்டதல்ல. யதார்த்தபூர்வமாகச் சிந்தித்து, நிலைமைகளின் தீவிரத்தைச் சீர்தூக்கிப் பார்த்து முடிவு செய்வதற்கான தற்றுணிவு அதிகாரமாகும்.

அதைத் தேவைப்படாத சமயங்களில் பிரயோகிக்காமல் இருப்பதிலும் -

அத்தியாவசியமாகத் தேவைப்படும் சமயங்களில் தவறாமல் பிரயோகிப்பதிலும் -

மிகுந்த அவதானமும், கவனமும், பொறுப்புணர்வும் மிக அவசியமாகும்.

மார்ச்சில் நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட சமயத்தில், வேட்புமனுத் தாக்கல் பூர்த்தியாக வேண்டும் என்ற தனது அரசியல் தேவையை எட்டுவதற்காக, உடனடியாக நாட்டை முடக்கி, ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் இருந்த போலும் அதைத் தள்ளிப் போட்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

வேட்புமனுத் தாக்கல் பூர்த்தியாகுவதற்காக இரண்டு, மூன்று நாள்கள் காத்திருந்தமையால் ஏற்பட்ட வினையை கொரோனா வைரஸின் முதல் சுற்றுத் தாக்கத்தின் போது நாடு எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

இப்போது தேர்தலுக்கான பிரசாரம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ள சமயத்தில் - கொரோனாத் தாக்கத்தில் இரண்டாவது சுற்றின் முதலாவது படி நிலை கட்டவிழ்கின்றது.

இது எவ்வளவு தூரத்துக்குப் விரிந்து சென்று, பரவித் தாக்கப் போகின்றது என்பது ஊகிக்க முடியாததாக இருக்கின்றது.

அந்தப் பரவலின் விபரீதத்தை - போக்கை - கவனத்தில் எடுத்து முடிவு செய்ய வேண்டிய விடயது இது.

ஆனால், பூமி சுற்றுவதை நிறுத்தினால் கூட தேர்தல் நடத்துவை நிறுத்த மாட்டோம். எக்காரணம் கொண்டும் தேர்தல் நடவடிக்கை நிறுத்தப்படமாட்டாது எனத் தேர்தல் ஆணையத் தரப்பில் கூறப்பட்டதாக முதலில் செய்திகள் வெளியாகின. அது உண்மையானால் அந்த நிலைப்பாடு முற்றிலும் அபத்தமானது; விவஸ்தை கெட்டது; பொறுப்பற்றது; அறிவுபூர்வமற்றது என்று குறிப்பிட விரும்பினோம்.

எனினும், தீர்மானமான முடிவு அதுவல்ல, நிலைமைக்கு ஏற்ப முடிவு செய்து அறிவிப்போம் என்று தெளிவுபடுத்தியிருக்கின்றார் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய.

இது விடயத்தில் சரியான தீர்மானத்தை, சரியான சமயத்தில் எடுக்க வேண்டியது முக்கியமானதாகும்.

கொரோனா பரவல் மற்றும் தாக்கம் பற்றிய புள்ளிவிவரங்கள், அது சமூகத் தொற்றாக மாறும் அல்லது மாறிய ஆபத்து நிலைமை உண்டா என்பவற்றைப் பரிசீலிப்பது ஒரு புறமும், சுகாதார மற்றும் மருத்துவ நிபுணர்களுடனான ஆலோசனை மறுபுறமாக உசிதமான தீர்மானத்தை, சரியான காலகட்டத்தில் எடுப்பதில் அதீத கவனம் அவசியமாகும்.

அரசியலில் ஒரு தரப்பு கொரோனாத் தொற்றைக் காட்டி தேர்தலை ஒத்திவைக்கக் கோருவதற்கும் -

அதே அரசியல் உள்நோக்கங்களுக்காக இன்னொரு தரப்பு தேர்தலை ஒத்தி வைக்காமல் நடத்தச் சொல்லி வற்புறுத்துவதற்கும் - வாய்ப்புகள், சந்தர்ப்பங்கள் உண்டு.

இந்தப் பிய்ச்சல், பிடுங்கல்களுக்குள் சிக்காமல், சுயமாக நிலைமையைப் பரிசீலித்து, சுயாதீனமாக ஆராய்ந்து, தீர்மானத்தை முன்னெடுப்பது தேர்தல் ஆணையத்தின் கடப்பாடாகும்.

ஒரு புறம் - மக்களின் பாரதீனப்படுத்த முடியாத ஜனநாயக உரிமை.

மறுபுறம் - நாட்டையே பேரவலத்துக்குள் ஆழ்த்தக் கூடிய கொடூரக் கோரரக்கனாக கொரோனா வைரஸ் பரவல்.

இவை இரண்டுக்கும் நடுவில் பொருத்தமான - பொறுப்பான - ஒரு முடிவை, வரலாற்றுக் குற்றச்சாட்டுத் தன் மீது விழாத வகையில், தேர்தல் ஆணையம் எடுக்க வேண்டியிருக்கும்.

# கொரோனா தாண்டவமாடினால் பொதுத்தேர்தல் நடைபெறுமா?

## நிலைமையைப் பொறுத்தே முடிவு என்கின்றார் மஹிந்த தேசப்பிரிய



இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்தால் ஆகஸ்ட் 5ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுமா? இல்லையா? என்பதை அப்போதைய நிலைமையைப் பொறுத்தே முடிவு எடுக்கப்படும்.

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு திட்டமிட்டவாறு இன்று ஆரம்பமாகின்றது. அநுராதபுரம் மாவட்டத்தில் இராஜாங்கனைப் பிரதேச செயலகப் பகுதியில் மட்டும் தபால் மூல வாக்களிப்பு பிற்போடப்பட்டுள்ளது.

தற்போதைய கொரோனா வைரஸின் தாக்கம் தொடர்ந்து அதிகரிக்குமா? இல்லையா? அல்லது ஓகஸ்ட் 5ஆம் திகதி திட்டமிட்டவாறு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுமா? ஆகிய கேள்விகளுக்கான பதில்களை என்னால் இப்போது உறுதிபடக் கூற முடியாது. ஏனெனில், நான் சோதிடம் பார்க்கும் நபர் அல்லன்.

தேர்தல்கள் ஆணைக்குழுவைப் பொறுத்த வரை திட்டமிட்ட திகதிகளில் அதற்குரிய வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

வாக்காளர்களினதும் எங்களினதும் பாதுகாப்புக் கருதி சுகாதார வழிகாட்டல்களுக்கு அதி முக்கியத்துவம் வழங்கி எமது பணிகளை முன்னெடுக்கின்றோம் – என்றார்.

# கொரோனாப் பொதுத்தேர்தல் தொடர்பில் அரசு, எதிரணிகளின் நிலைப்பாடு என்ன?

நாட்டில் கொரோனா வைரஸின் தாக்கம் மீண்டும் ஆரம்பித்துள்ள நிலையில் ஏற்கனவே ஓகஸ்ட் மாதம் 05ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் அரசு, எதிரணிகள் தத்தமது நிலைப்பாடுகளைத் தெரிவித்துள்ளன.

கொரோனாவின் பாதிப்பு நாளுக்கு நாள் தொடர்ந்து அதிகரித்தால் குறித்த தினத்தில் பொதுத்தேர்தலை நடத்துவதா? இல்லையா? என்பதை தேர்தல்கள் ஆணைக்குழுவே தீர்மானிக்க வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

பிரதான பரப்புரைக் கூட்டங்களில் மக்கள் அதிகளவில் கலந்துகொள்வார்கள் என்ற படியால் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பிரதான பரப்புரைக் கூட்டங்களைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோம் என்று அக்கட்சியின் தலைவரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி வேட்பாளர்களின் சிறு பரப்புரைக் கூட்டங்கள் இடம்பெற எமது கட்சி அனுமதி வழங்கியுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் மீண்டும் உருவெடுக்க ராஜபக்ச அரசே முழுப்பொறுப்பு என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் தெரிவித்தனர்.

மக்களின் சுகாதாரப் பாதுகாப்பில் கவனம் செலுத்தாமல் கொரோனாவின் தாக்கத்துக்குள் பொதுத்தேர்தலை நடத்தி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் எண்ணத்துடனேயே ஊரடங்கால் முடக்கப்பட்டிருந்த நாட்டை அரசு திறந்துவிட்டது எனவும் அவர்கள் குற்றம்சாட்டினர்.

தற்போதைய நிலைமையில் பாதுகாப்பான முறையில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது கேள்விக்குறியே எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

எனவே, இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு தாமதிக்காமல் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# கொட்டகலையிலும் புதிதாக வருகின்றது இராணுவ முகாம்

## இராதாகிருஷ்ணன் தகவல்

நாட்டை இராணுவமயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வரும் இந்த அரசாங்கம், கொட்டகலையிலும் இராணுவ முகாமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இது மக்களுக்குப் பெரும் இடையூறாக அமையும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கொட்டகலையில் நேற்று மாலை நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஜனாதிபதி தேர்தலின் போது நாம் சஜித் பிரேமதாஸாவுக்கு ஆதரவளித்தோம். எமது மலையக மக்களும் அவருக்கே வாக்களித்தனர். ஆனால், துரதிஷ்டவசமாக அவரால் வெற்றி பெற முடியாமல் போனது. பாதுகாப்பை முன்னிலைப்படுத்தி பிரச்சாரம் செய்தே மொட்டுத் தரப்பு வெற்றிபெற்றது.

பாதுகாப்புப் பற்றி கதைத்தவர்கள் இன்று கொட்டகலையிலும் இராணுவ முகாமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இவ்வாறு இராணுவ முகாம் அமையுமானால் அது மக்களுக்கு இடைஞ்சலாகவே இருக்கும். இரவில் நடமாடினால் உள்ளே போட்டுவிடுவார்கள். பொலிஸாரிடம் சரி, உண்மையை எடுத்துக்கூறிவிட்டு வந்துவிடலாம். ஆனால், இராணுவம் வந்தால் அவ்வாறு செய்யமுடியாது. சிவில் நிர்வாகத்துக்கும், இராணுவ நிர்வாகத்துக்குமிடையிலான வேறுபாடு இதுதான்.

அத்துடன், அமைச்சுகளுக்கான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் என எல்லாப் பதவிகளுக்கும் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறு படிப்படியாக நாடு இராணுவ ஆட்சியை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. போதாகுறைக்கு மலையகத்துக்கும் முகாம் வரப்போகின்றது. இதனைத் தடுத்து நிறுத்தவேண்டுமானால் எமது ஆட்சி உருவாகவேண்டும். எனவே, சஜித் பிரேமதாஸா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

13ஆவது திருத்தச்சட்டம், 19ஆவது திருத்தச்சட்டம் ஆகியனவும் நீக்கப்படும் என்கின்றனர். இதனைத் தடுப்பதற்கு மொட்டுக் கட்சிக்கு வாக்களிக்கக் கூடாது. – என்றார்.

# எல்லை மோதல் சீனா அதிபரால் நன்கு திட்டமிடப்பட்ட ஒரு செயல்

## இந்தியத் தரப்பினர் பாய்ச்சல்







இந்தியா - சீனா எல்லைப் பகுதியிலுள்ள கல்வான் பள்ளத்தாக்கு, பாங்காங் ஏரி ஆகிய இடங்களில் சீனப் படைகளின் நகர்வு மே மாதத் தொடக்கத்தில் ஆரம்பித்து விட்டது.

இது பல மாதங்களாகத் திட்டமிடப்பட்ட ஒன்று. சீன அதிபர் ஜி ஜின்பிங்கே இதன் பின்னணியில் உள்ளார் என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இது குறித்து அவற்றின் செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சீனப் படைகளின் எண்ணிக்கை எல்லைப் பகுதியில் மே மாதத் தொடக்கத்திலேயே வேறுபாடு அடைந்தது. நடந்த சம்பவங்களை வைத்து நோக்கும் போது இது பல மாதங்கள் திட்டமிட்ட நகர்வு என்று தெரிகிறது. பாங்காங் ஏரிப்பகுதியில் சீனா தனது இருப்பைக் குறைத்துக் கொண்டு ஃபிங்கர் 5 பகுதிக்குள் இந்தியா உரிமை கோரும் பகுதிக்குள் உள்நுழைந்தது. ஜனவரி மாதப் பிற்பகுதியிலும் பெப்ரவரி மாத ஆரம்பத்திலும் லடாக் எல்லையில் இருக்கும் ஷின்ஜியாங் பகுதியில் வழக்கமான ஆண்டுகளில் தாம் செய்கின்ற பயிற்சிக்கான படைதிரட்டல்தான் என்ற போர்வையில் சீன இராணுவம் நிலை நிறுத்தப்பட்டது.

ஆனால் இந்த ஆண்டு முந்தைய ஆண்டுப் பயிற்சிகள் போல் அல்லாமல் எப்போதும் தங்கள் பகுதியிலேயே தொலைவில் பயிற்சி பெறுவதை வழக்கமாகக் கொண்ட சீன ராணுவம் முதல் முறையாக எல்லைக்கு அருகில் வந்தன. பொதுவாக இங்கு முன்னிலைப் பகுதியில் எல்லைப் படைகளே இருப்பது வழக்கம். இதனால்தான் ஏப்ரலிலிருந்தே பெரிய அளவில் படைத்திரட்டல் நேர்ந்துள்ளது. 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சீன அதிபர் ஜின்பிங் பயிற்சித் படைத்திரட்டல் உத்தரவு ஒன்றில் கையெழுத்திட்டார். அப்போது அவரே உயர்மட்ட தயாரிப்பு நிலையைப் பராமரிக்க என்று தெரிவித்தார். இந்த உத்தரவு வழக்கமானதாக அப்போது பார்க்கப்பட்டது. ஆனால் இந்திய அதிகாரிகள் என்ன கூறுகிறார்கள் என்றால் சீனாவின் ஆண்டுப்பயிற்சி முறைகளில் பெரிய அளவில் மாற்றம் இருந்தது என்றும் அதிபர் ஜின்பிங்கின் பயிற்சிப் படைத் திரட்டல் உத்தரவில் போர் பயிற்சி மேற்கொள்ளவும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது என்றுள்ளது.

# விகாஸ் துபே சுடப்பட்ட சம்பவம் ஓய்வுபெற்ற நீதிபதி விசாரணை



இந்தியாவின் உத்தர பிரதேசத்தில் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட விகாஸ் துபேயின் சம்பவத்தில் நீதி விசாரணைக்கு அந்த மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

விகாஸ் துபேயின் குற்றச் செயல்கள் குறித்துச் சிறப்பு புலனாய்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் துபேயைச் சுட்டுக் கொன்றமை தொடர்பாக விசாரணை முன்னெடுக்கப்படுகிறது.

அலகாபாத் உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி சசிகாந்த் அகர்வால் தலைமையில் இந்த விசாரணையை நடத்துவதற்கு யோகி ஆதித்யநாத் அரசு நேற்று உத்தரவிட்டது. இதன்படி அவர் தனது விசாரணைகளைத் தொடர்ந்தார். முன்னதாக, விகாஸின் குற்றச் செயல்கள், அரசியல் மற்றும் பொலிஸ் தொடர்புகள் குறித்து விசாரிப்பதற்கு மாநில மேலதிகத் தலைமைச் செயலாளர் சஞ்சய் ஆர்.புஸ்ரெட்டி தலைமையில்சிறப்புபுலனாய்வுக் குழுவை (எஸ்ஐடி) உ.பி. அரசு நேற்று முன்தினம் அமைத்தது. இந்தக் நேற்றுத் தனது விசாரணையை ஆரம்பித்தது.

# கொரோனா மருந்து என்று கூறி மது கொடுத்து பாலியல் கொடுமை



கொரோனா மருந்து என்று கூறிச் சிறுவர்களுக்கு போதைப் பொருளைக் கொடுத்து அவர்களை ஆபாசப் படம் பார்க்கவைத்துப் பாலியல் செய்கைகளுக்கு உட்படுத்திய சாமியார் உட்பட 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்தியாவின் உத்திரபிரதேச மாநிலம், முசாபர்நகரில் இருந்து 30 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சுக்ரட்டல் ஆசிரமத்தில் இந்தச் சம்பவம் நடந்தது.


குறித்த ஆசிரமத்தில் கல்வி பயில வந்த சிறுவர்களே இவ்வாறு பாலியல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். ஆசிரமத்திற்கு சென்ற பொலிஸார் பாதிக்கப்பட்ட 10 சிறுவர்களை ஆசிரமத்திலிருந்து மீட்டனர். இவர்கள் திரிபுரா மிசோரம் மாநிலத்தை சேர்ந்தவர்கள். மீட்கப்பட்ட சிறுவர்களை பரிசோதனை செய்த போது, அவர்களில் 4பேர் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டிருப்பது தெரியவந்தது.

அதைத் தொடர்ந்து, பொலிஸ் விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன. குற்றம்சாட்டப்பட்ட சாமியார், சிறுவர்களுக்கு கொரோனா மருந்து என்ற பெயரில் வலுகட்டாயமாக மதுபானத்தைக் கொடுத்துள்ளார். அவர்கள் போதையில் இருக்கும் போது, ஆபாசப் படங்களை வற்புறுத்திப் பார்க்க வைத்துள்ளார். பின்னர், அவர்களைக் கடுமையான பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிக் கொடுமைபடுத்தியுள்ளார். பாதிக்கப்பட்ட சிறுவர்கள் கூறுகையில், அவர் பேச்சைக் கேட்க மறுத்தால் கண்மூடித்தனமாக தாக்கப்படுவார்கள் என்று தெரிவித்தனர். குறித்த ஆசிரமத்தை நடத்தி வந்த சாமியார் பக்தி பூண் கோவிந்த், மோகன் தாஸ் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## கேரள தங்கக்கடத்தல் விவகாரம்

# கடத்தல் பணத்தில் தீவிரவாதச் செயல் விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள்!





கேரளாவில் நிகழ்ந்த தங்கக் கடத்தல் மூலம் கிடைத்த பணம் தீவிரவாதச் செயல்களுக்குப் பயன்படுத்தப்பட்டது என்று விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

திருவனந்தபுரத்தில் உள்ள ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதரகத்தின் பெயரில் சரக்கு விமானத்தில் கடத்தி வரப்பட்ட 30 கிலோ தங்கத்தை விமான நிலையச் சுங்க அதிகாரிகள் கைப்பற்றி அது குறித்து விசாரணைகளை முன்னெடுத்தனர். இந்தக் கடத்தலில் முக்கிய குற்றவாளியாகக் கருதப்பட்ட ஸ்வப்னா சுரேஷ் என்ற, கேரளா மாநிலத் தகவல் தொழில்நுட்ப (ஐ.டி.) துறை முன்னாள் ஊழியர் மற்றும் சந்தீப் நாயர் ஆகியோர் தலைமறைவாயினர். இவர்கள் 3 பேர் மட்டுமின்றி எர்ணாகுளத்தை சேர்ந்த பாசில் பரீத் ஆகிய 4 பேர் மீதும் உபா சட்டத்தின் கீழ் தேசிய புலனாய்வு அமைப்பு (என்.ஐ.ஏ.) அதிகாரிகள்வழக்குப்பதிவுசெய்தனர்.

இதைத்தொடர்ந்து ஸ்வப்னா சுரேஷ் உள்ளிட்டோரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் பலனாக ஸ்வப்னா சுரேஷ் மற்றும் சந்தீப் நாயர் இருவரும் நேற்று முன்தினம் பெங்களூருவில் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தங்கக் கடத்தல் மூலம் கிடைத்த பணம் தீவிரவாதச் செயல்களுக்குப் பயன்படுத்தப்பட்டது என்று தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் முன்னெடுத்த விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி உள்ளது.

இந்த நிலையில், கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்ற தங்கக் கடத்தல் குறித்து விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.







அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தின் கொரோனாடோவில் உள்ள கடற்படைத் தளமான சான் டியாகோவில் நங்கூரமிட்டிருந்த கப்பலில் தீ பரவியது. தீயணைப்பு படகுகள் அந்தத் தீயை அஷ்ணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

# உக்ரைன் விமானம் வீழ்த்தப்பட்டதற்கு தவறான தகவல் பரிமாற்றமே காரணம்

## ஈரான் தரப்பில் தெரிவிப்பு



கடந்த ஜனவரி மாதம் ஈரானில் உக்ரைன் பயணிகள் விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது. இதனால் அதில் இருந்த 176 பேர் சாவடைந்தனர். இது குறித்து விசாரித்து வரும் ஈரான் விமானப் போக்குவரத்து அமைப்பு, இந்த விபத்துக்குத் தனி மனிதத் தவறும், முறையற்ற இராணுவத் தகவல் பரிமாற்றமுமே காரணம் என்று கூறியுள்ளது.

குறித்த உக்ரைன் விமானம் ஏவுகணையால் தாக்கப்பட்ட சம்பவத்தை முதலில் ஈரான் மறுத்தது. ஈரானின் அப்போதைய உள்நாட்டு விமானப் போக்குவரத்துத் தலைவர், நிச்சயமாக அந்த விமானம் ஏவுகணையால் தாக்கப்படவில்லை என்று தெரிவித்திருந்தார். ஆனால், இது குறித்து விசாரித்து வரும் விமானப் போக்குவரத்து அமைப்பு இது குறித்துத் தெரிவிக்கையில், இராணுவத் தொலைத்தொடர்பில் ஏற்பட்ட தவறே இந்த விபத்துக்கு காரணம் என்று தெரிவித்துள்ளது. அத்தோடு இது தனி ஒரு மனிதனின் தவறு என்றும் இராணுவ உயர் மட்டங்களில் இருந்து விடுக்கப்பட்ட உத்தரவுகளுக்கு அமைய நடத்தப்பட்ட தாக்குதலல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெ. இராணுவத்தில் கறுப்பினப் பெண்மணி!



அமெரிக்க இராணுவத்தில் போர் விமானத்தை இயக்கும் விமானியாக வரலாற்றில் முதல் முறையாகக் கறுப்பினத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஆமெரிக்கப்பொலிஸாரால் கொல்லப்பட்ட கறுப்பினத்தவரான ஜோர்ச் ஃபிளாய்ட்டுக்கு நீதி கோரிப் போராட்டங்கள் அதிகரித்துள்ள நிலையில் இந்தச் செய்தி வெளியாகியுள்ளது. மேட்லைன் ஸ்வெகிள் என்ற அந்தப் பெண் அமெரிக்கக் கடற்படை விமானப்பள்ளியில் தனது பயிற்சியை வெற்றிகரமாக முடித்துப் போர் விமானத்தின் விமானியாக உள்ளார் என்றும் பஅவர் இந்த மாத இறுதியில் 'தங்கத்தின் சிறகுகள்' என்றும் அமெரிக்கக் கடற்படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெர்ஜீனியா மாகாணம் பர்க் நகரைச் சேர்ந்த மேட்லைன் ஸ்வெகிள் 2017ஆம் ஆண்டு அமெரிக்கக் கடற்படை அக்கடமியில் பட்டம் பெற்றதைத் தொடர்ந்து 3 ஆண்டு காலக் கடும் பயிற்சிக்குப் பிறகு தற்போது அவர் போர் விமானத்தின் விமானியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

# ஹொங்கொங் மக்களுக்குக் குடியுரிமை ஆஸ்திரேலியா அரசு அதிரடி அறிவிப்பு

## சீனா எதிர்ப்புத் தெரிவிப்பு



ஹொங்கொங் மக்கள் 10 ஆயிரம் பேருக்கு நிரந்தரக் குடியுரிமை வழங்குவதற்கு ஆஸ்திரேலியா அரசு முடிவு செய்துள்ளது. ஹொங்கொங்கில் சீனா தனது தேசிய பாதுகாப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இந்தச் சட்டத்தின் கீழ், பிரிவினைக்குக் குரல் கொடுப்போர், சீனாவுக்கு எதிராகப் பரப்புரை செய்வோர் உள்ளிட்டோரை, தேசத் துரோகக் குற்றச்சாட்டில் கைது செய்யலாம்.

சீனாவின் இந்த புதிய சட்டத்தால் பாதிக்கப்படும் ஹொங்கொங் மக்களுக்கு அடைக்கலம் வழங்கிக் அவர்களுக்குக் குடியுரிமை அளிப்பது குறித்துப் பரிசீலிக்கப்பட்டு வருவதாக, ஆஸ்திரேலிய பிரதமர், ஸ்கொட் மொரிசன் சில வாரங்களுக்கு முன்பு அறிவித்தார். இந்த நிலையில் ஆஸ்திரேலியாவில் ஏற்கனவே பல்வேறு காரணங்களுக்காக தங்கி இருக்கும் 10ஆயிரம் ஹொங்கொங் மக்களுக்கான நுழை விசைவுக் காலப்பகுதியை நீட்டிப்பதாகவும், இதன் மூலம் அவர்களுக்கு ஆஸ்திரேலிய குடியுரிமை அளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

அதன்படி கல்வி மற்றும் பணி நிமித்தமாக ஆஸ்திரேலியாவில்உள்ளஹொங்கொங் மக்களுக்கு 5 வருடம் நுழை விசைவு நீட்டிப்பு வழங்கவும் இதன் வழியாக நிரந்தர குடியுரிமை அளிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் ஹொங்கொங்கைச் சேர்ந்த தொழிலதிபர்கள் மற்றும் தகுதி வாய்ந்த பணியாளர்கள் ஆஸ்திரேலியாவுக்கு எதிர்காலத்தில் குடிபெயரவும் வழிவகை செய்யப்படும் என்று ஆஸ்திரேலியா அரசு தெரிவித்துள்ளது. ஆஸ்திரேலிய அரசின் இந்த முடிவுக்குச் சீனா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

## அமெரிக்காவில் பயங்கரம்

# 2 பொலிஸாரைச் சுட்டுக் கொன்றுவிட்டு தன்னையும் சுட்டுக் கொன்ற ஆயுததாரி!




அமெரிக்காவில் பொலிஸ் அதிகாரிகள் இரண்டு பேரைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுக் கொன்றுள்ளார் இளைஞர் ஒருவர். இந்தச் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவில் கடந்த சில வருடங்களாகத் துப்பாக்கிக் கலாசாரம் பெருகி வருகிறது. பொலிஸாரைக் குறிவைத்தும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் அதிகளவில் அரங்கேறி வருகின்றன.

இந்த நிலையில் அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தின் மெக்காலன் நகரில் நடந்த துப்பாக்கி சூட்டில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் கொல்லப்பட்டனர். எடெல்மிரோ கார்சா (வயது 45) மற்றும் இஸ்மாயில் சாவேஸ் (39) ஆகியோரே இவ்வாறு கொல்லப்பட்டவர்களாவர்.

பொலிஸ் அதிகாரிகளை சுட்டுக் கொன்றுவிட்டு தற்கொலை செய்து கொண்ட அந்த நபர் மெக்காலன் நகரைச் சார்ந்த ஆல்டன் காரமில்லோ (வயது23) என்பதும் அவர் குற்றப் பின்னணி கொண்டவர் என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# தொடர் மழையால் நேபாளத்தில் நிலச்சரிவு 60 பேர் சாவு - 41 பேரைக் காணவில்லை!

*நேபாளத்தில் கடந்த 4 நாள்களாகத் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்த மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் காரணமாக இது வரை 60 பேர் சாவடைந்துள்ளனர்.*

*41 பேர் காணாமல் போயுள்ளனர். மேற்கு நேபாளத்தின் மயாக்டி மாவட்டத்தில் மட்டும் 27 பேர் சாவடைந்துள்ளனர்.*

*நிலச்சரிவினால் இடிந்த வீடுகளில் காணாமல் போனவர்களை மீட்கும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. வீடுகள் நிலச்சரிவில் அடித்துச் செல்லப்பட்டதால் நூற்றுக்கணக்கானோர் வீடிழந்தனர். இவர்கள் தற்போது உள்ளூர் பள்ளிகளிலும் சமுதாயக் கூடங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.*

*நேற்றைய நிலவரப்படி சுமார் ஆயிரம் பேர் இந்த இடர்களால் உண்டாஜூன ஆபத்தான பகுதிகளிலிருந்து வெளியேறினர். இந்த வாரத்தின் முதல் 3 நாள்களுக்குக் கடும் மழை பெய்யும் என்று நேபாளத்தின் வானிலை மையம் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.*



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழரின் பிரதிநிதித்துவத்தை முறியடிப்பதற்காகவே தமிழர் என்ற பெயரில் வன்னியில் பலர் களமிறக்கம்!

## கூட்டமைப்பு வேட்பாளர் சத்தியலிங்கம் விசனம்





(கி.வசந்தரூபன்)

பெரமுனவின் பங்காளிகளாக வெற்றி பெற முடியாதவர்கள் தனித் தமிழ் கட்சி என்ற போலி முகமூடியை போட்டு மக்களிடம் வாக்கு கேட்கிறார்கள் ப.சத்தியலிங்கம்

கடந்த காலங்களில் பெரமுனவின் பங்காளிகளாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறமுடியாதவர்கள் தற்போது தாம் தனித் தமிழ் கட்சி என்ற போலி முகமூடியைப்போட்டு மக்களிடம் வாக்கு கேட்கிறார்கள் என முன்னாள் வடமாகாண அமைச்சரும், வன்னி மாவட்ட இலங்கை தமிழரசுகட்சியின் வேட்பாளருமான ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா அரச விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற இளையோர் சந்திப்பு ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் இது தொடர்பாக அவர் கருத்து தெரிவித்தபோது –

வன்னித் தேர்தல் தொகுதி என்பது ஒரு முக்கியமானது என்பது மக்கள் புரிந்து கொள்ளவேண்டும். கடந்த காலத்தில் வெற்றிலைச் சின்னத்திலும் வெவ்வேறு சின்னங்களிலும் போட்டியிட்டவர்கள் தற்போது தாங்கள் தமிழர்கள், தாங்கள் தமிழ் கட்சியிலே போட்டியிடுகின்றோம், தங்களுடைய வேட்பாளர்களும் தமிழர்தான் என்கின்ற பிரசாரத்தை முன்னெடுத்துத் தங்களைத் தமிழர்களாக காட்டி வாக்களியுங்கள் என்று கேட்கிறார்கள். அப்படி கேட்பவர்கள் இந்த பொதுஜனப் பெரமுன என்று சொல்லப்படுகின்ற மொட்டு கட்சியினுடைய சகோதர, சகோதரி வேட்பாளர்கள் அல்லது அந்த கட்சிகள் பொதுஜனப் பெரமுனையுடைய பங்காளிகட்சிகள் அல்லது கூட்டாளிக் கட்சிகள். அவர்கள் தமிழ்ப் பெயர்களில் கேட்பதற்குக் காரணம் கடந்த காலங்களிலே எங்களுடைய மக்கள் அரசாங்க கட்சிக்கு கணிசமான வாக்குகளை கொடுக்கவில்லை. ஆகவே அவர்கள் தமிழ் கட்சி என்ற அந்த முகமூடியோடு இப்போது வந்து மக்கள் முன் நிற்கிறார்கள்.

தங்களுக்கு ஓர் ஆசனம் கூட கிடைக்காது என்பது அவர்களுக்கு தெரியும். அவ்வாறு தெரிந்தும் ஏன் நிக்கிறார்கள்? தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவைக் குறைப்பதாகவும் எங்களுடைய வாக்குகளை சிதறடிக்கப்பட வேண்டும் என்பதற்காகவுமேயாகும். இவ்வாறு சுயேச்சைக் குழுக்களிலும் இதர கட்சிகளிலும் கேட்பவர்கள் 15 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் வாக்குகளைச் சிதறடிப்பார்களேயானால் நாங்கள் தமிழ் பிரதிநிதி ஒருவரை இழந்துவிடுவோம்.

வன்னித் தேர்தல் தொகுதி என்பது இப்போது சிங்கள மக்களை கொண்டுவந்து குடியேற்றி இனப்பரம்பலை மாற்றுகின்ற ஒரு பிரதேசமாக அவர்களால் அவதானிக்கப்பட்டு வருக்கின்றது. எனவே நாம் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். கூட்டமைப்பைப் பலப்படுத்துவதனூடாகவே நாம் எமது இருப்பைப் பலப்படுத்திக்கொள்ள முடியும். – எனத் தெரிவித்தார்.

# பூநகரியில் சந்திரகுமார் அணியின் கூட்டத்தில் பெரும் திரளான மக்கள்

சுயேச்சைக் குழுவாகக் கேடயச்சின்னத்தில் போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பிர் மு. சந்திகுமாரின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் பூநகரி வாடியடிச் சந்தியில் நேற்று மாலை மூன்று மணியளவில் பெரும் திரளான மக்கள் மத்தியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகின்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையிலான அணியினரின் பூநகரி பிரதேசத்திற்கான தேர்தல் பிரசாரக் கூட்டமே நேற்று மாலை இடம்பெற்றது. பூநகரியின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

இங்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை முன்னாள் நிர்வாகப் பொறுப்பாளரும் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளருமான மணியண்ணன், ஓய்வு பெற்ற கிளிநொச்சி கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம், கிளிநொச்சி மாவட்டக் கடற்றொழிலாளர்கள் சங்கங்களின் சமாசத் தலைவர் ஜோசப் பிரான்சிஸ், ஜெயபுரம் பிரதேச சிவில் சமூகப் பிரதிநிதி இராஜரட்ணம், கரைச்சி, பூநகரி பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் என ஆயிரக்கணக்கான பொது மக்கள்ஆகியோர்கலந்துகொண்டனர்.









# பண்ணாகத்தில் அமிர் நினைவு நிகழ்வு



அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 31 ஆவது நினைவு தினம் இன்று யாழ் பண்ணாகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கையின்முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவருமாகிய அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 31 ஆவது நினைவு தினம் இன்று இடம்பெற்றது. யாழ்ப்பாணம் பண்ணாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் உருவச்சிலைப் பகுதியில் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது ஈகைச்சுடர் ஏற்றி உருவச்சலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு பின்னர் மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தர்மலிங்கம் சித்தார்த்தன், எம்.கே சிவாஜிலிங்கம் மற்றும் வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் என்.நடனேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந் நினைவு தின நிகழ்வைப் பண்ணாகம் மக்கள் ஒன்றியத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.





# பதுளையில் 14 தோட்டத் தொழிலாளர் குளவிக் கொட்டுக்கு இலக்கானார்கள்

கொழும்பு, ஜூலை 13

பதுளை, நமுனுகுல பிங்கராவ தோட்ட தொழிற்சாலை பிரிவில் தேயிலைக் கொழுந்து பறித்துகொண்டிருந்த தொழிலாளர்கள் 14 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி பள்ளகெட்டுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக பசறை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இன்று காலை 10.30 மணியளவில் குளவிக் கூடொன்று கலைந்து சராமாரியாக தொழிலாளர்களைத் தாக்கியுள்ளது. அண்மை காலமாகத் தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் குளவிகளின் தாக்கத்திற்குள்ளாவதுடன் மலைகளில் மிகுந்த அச்சத்துடன்பணிபுரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மாகாண சபை முறைமை ஒழிக்கபடமாட்டாது; புதிய அரசமைப்பின் ஊடாக அதிகாரப் பகிர்வு

## 'மொட்டு'வின் முக்கியஸ்தர் வாசுதேவ திட்டவட்டம்

*கொழும்பு, ஜூலை 13*

*புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டாலும் அதிகாரப்பகிர்வு இல்லாதொழிக்கப்படாது. அதிகாரப் பகிர்வுக்காக நான் தொடர்ந்து குரல் கொடுப்பேன்.*

*- இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.*

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்றும், மாகாண சபை முறைமை நாட்டுக்கு அவசியம் இல்லை என்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்களால் வெளியிடப்படும் அறிவிப்புகள் தொடர்பில் வினவியபோதே வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாண சபைகளுக்குத் தற்போது பகிரப்பட்டுள்ள அதிகாரங்கள் எவ்வித மாற்றமும் இன்றி தொடர்ந்தும் அமுலில் இருக்கவேண்டும் என்பதே அரசின் எதிர்பார்ப்பு. எனது நிலைப்பாடும் அதுவே.

ஏனெனில் எமது அரசுக்கு மாகாண நிர்வாகங்களுடன் ஒத்துழைத்துச் செயற்படக்கூடிய ஆற்றல் இருக்கின்றது.

புதிய அரசமைப்பொன்று இயற்றப்படும்போது '13' என்றொரு விடயம் இருக்காது. ஆனாலும்,



மாகாண சபைகளுக்குப் புதிய அரசின் ஊடாக அதிகாரங்கள் பகிரப்படும். மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள், மத்திய அரசு ஆகியவற்றுக்கிடையில் தான் அதிகாரப் பகிர்வு இடம்பெறும் – என்றார்.

# சிங்களவர்களே வந்தேறு குடிகள் எனும் விக்கிரமபாகுவின் கருத்துக்கு வரவேற்பு

இலங்கையிலுள்ள சிங்களவர்கள்தான் வந்தேறு குடிகள். இதனைத் தன்னால் நிரூபித்துக்காட்ட முடியுமென நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையின் கருணாரத்தினவின் இத்தகைய துணிச்சலான கருத்துக்கு, திராவிட முன்னேற்ற கழகத்தின் செய்தி தொடர்பாளர் கே. எஸ். இராதாகிருஷ்ணன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக கே.எஸ்.இராதாகிருஷ்ணன் மேலும் கூறியுள்ளமை வருமாறு :-

விக்கிரமபாகு கருணாரத்தின சிங்களவராக இருந்தாலும் தமிழர்களுக்காகக் குரல்கொடுத்து வருகின்ற ஒருவர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற டெசோ மாநாட்டுக்கு தி.மு.க.வினால் அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

குறித்த அழைப்பினை ஏற்று, டெசோ மாநாட்டிற்கு சென்னைக்கு வருவதற்காக கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போது, ராஜபக்ஷ அரசு அவரைத் தடுக்க நினைத்தது.

ஆனாலும் விக்கிரமபாகு கருணாரத்தின அதனையும் மீறி குறித்த மாநாட்டுக்கு வருகை தந்தார். இவ்வாறு மாநாடு முடிந்து, இலங்கைக்கு சென்ற போது, அப்போதைய அரசு அவரை தாக்கி, கறுப்புக் கொடி அசைத்து எதிர்ப்பு தெரிவித்தது

இத்தகையவர் தற்போது, சிங்களவர்கள்தான் இலங்கையில் வந்தேறிகள் என்றும் அதற்கான ஆதாரங்களை வெளிப்படுத்த முடியும் என்றும் கூறியுள்ளார்.

இவ்வாறு எவருக்கும் அஞ்சாமல் அவர் துணிச்சலாக கருத்து வெளியிட்டுள்ளமை பாராட்டுக்குரியது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மும்மொழிக் கற்கை நிலையத்தின் அறிவித்தல்

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மும்மொழிக் கற்கை நிலையத்தினால் நடத்தப்படும் சகல வகுப்புக்களும் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வரை நடைபெறமாட்டா என மும்மொழிக் கற்கை நிலையத்தின் பதில் பணிப்பாளர் பி. என். சுதர்சன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை முதல் வழமையான நேர அட்டவணைப்படி வகுப்புகள் நடைபெறும் எனவும், மாற்றங்கள் ஏற்படின் அவை பற்றிப் பத்திரிகைகள் வாயிலாக அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# பொருளாதாரத்திலும் அபிவிருத்தியிலும் பிளாஸ்ரிக் பாவனையினால் பின்னடைவு

## விளக்குகின்றார் யாழ் அரச அதிபர்

பிளாஸ்ரிக் பாவனை நமது பொருளாதாரத்தில் பின்னடைவை ஏற்படுத்துவதுடன், அபிவிருத்தியிலும் பின்னடைவை ஏற்படுத்துகின்றது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகரில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றி சுற்றுச்சூழலைச் சுத்தப்படுத்தும் பணி இராணுவத்தினரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய பஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டபோது பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. அங்கு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

"பிளாஸ்ரிக் பொருள்களைச் சுத்தப்படுத்துவதனை நோக்கமாக கொண்டு, யாழ்ப்பாண கட்டளைத் தலைமையத்தினால், நகரத்தை பிளாஸ்ரிக் பாவனையில் இருந்து மீட்டெடுத்தல் மற்றும் பாதுகாத்தல் எனும் தொனிப்பொருளில், இந்த விழிப்புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போது, உலகளாவிய ரீதியில் இந்த பொலீத்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனை பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது.

எமக்கும் பெரும் அச்சுறுத்தலாக இந்த பிளாஸ்ரிக் கழிவுகள் காணப்படுகின்றன. பொருளாதாரத்தை முடக்குகின்ற அளவிற்கு அல்லது பல்வேறு அபிவிருத்திப் பின்னடைவிற்கு இந்தப் பிளாஸ்ரிக் கழிவுகள் பிரதான காரணமாக இருக்கின்றன.

இலங்கை மட்டுமல்ல, ஆசிய நாடுகள் உள்ளிட்ட வளர்ந்து வரும் நாடுகளில் பிளாஸ்ரிக் பொருள்கள் கடலில் கலப்பதினால், உணவில் ஏற்படுகின்ற பாதுகாப்பு அச்சுறுத்தல் மிகப் பாரிய விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

பசுமைப் பொருளாதாரம்



அல்லது நீலப் பொருளாதாரம் என்று சொல்லப்படுகின்ற கடல் உணவு உட்பட ஏனைய சுகாதார அச்சுறுத்தல்களுக்கு இந்த பிளாஸ்ரிக் பாவனை காரணமாகின்றது.

ஆகவே, எமது அரசாங்கமும் ஒரு கொள்கையை வகுத்து, பிளாஸ்ரிக் பொருள்களை உற்பத்தி செய்வதனைத் தடை செய்துள்ளது அல்லது மீள்சுழற்சி செய்து அவற்றைப் பயன்படுத்துவதற்கா நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடு, மாவட்டம், கிராமம், குடும்பரீதியில் இது ஏற்படுத்தி வருகின்ற தாக்கம் மிகப் பெரியது. ஏனெனில், பிளாஸ்ரிக் பொருட்கள் உக்குவதற்கு 1000 வருடங்கள் எடுக்கின்றன என வல்லுனர்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஆகவே, இந்தப் பிளாஸ்ரிக் பொருள்களைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது மற்றும் மீள்சுழற்சிக்கு வழிசெய்வது போன்ற விழிப்புணர்வு நடவடிக்கைகளை யாழ். மாவட்ட கட்டளைத் தலைமையகம் எடுத்துள்ளது.

இந்த விழிப்புணர்வு எமது மக்களிடையே சென்றடைய வேண்டும். எமது சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பிளாஸ்ரிக் பொருள்களின் கழிவகற்றுவுதற்கு கிரமமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், அதேபோன்று, பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனையைத் தடுப்பதற்கும், மக்கள் நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

எனவே, பொது மக்கள் பிளாஸ்ரிக் பொருள்களை பாவிப்பதில் விழிப்புணர்வு பெற வேண்டுமென்பதுடன், எமது சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கும் ஒத்துழைப்புத் தர வேண்டும்.- என்றார் அவர்.

# தமிழ் முற்போக்குக் கூட்டணியின் வெற்றியே மலையகத்தின் வெற்றி என்கிறார் திகாம்பரம்

தமிழ் முற்போக்கு கூட்டணியின் வெற்றியே மலையகத்தின் வெற்றி. எனவே, கூட்டணி வேட்பாளர்களை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

லிந்துலை மெராயா கௌலினா தோட்டத்தில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

காணி உரிமை, தனிவீடு, உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு என மலையக மக்களுக்கு பலசேவைகளை நான் கடந்த நான்கரை வருடங்களில் செய்திருந்தாலும், திகாம்பரம் ஒன்றுமே செய்யவில்லை எனப் பொய்யுரைத்து சிலர் வாக்குகேட்பதை காணமுடிகின்றது. என்னை விமர்சித்தே சின்ன, சின்ன வாண்டுகளெல்லாம் ஓட்டு கேட்கின்றன. அதுமட்டுமல்ல மலையகத்தை ஒரே நாளில் மாற்றியமைக்கப. போகிறார்கள் எனவும்



கொக்கரிக்கின்றனர்.

யார் என்ன சொன்னாலும், எனக்கு எனது மக்களே முக்கியம். நான் உங்களில் ஒருவன். எனது மக்களுக்கு எவராவது துரோகம் செய்தால் அவர் நிம்மதியாக வாழ முடியாத நிலை ஏற்படும் என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றேன்.

இன்று கண்டியில் இருந்து ஒருவர் வந்துள்ளார். திகாம்பரம் ஒழுங்காக அரசியல் செய்திருந்தால் அவர் வந்திருக்கமாட்டாராம். நான் கொழும்பில் சுகபோகம் அனுபவிக்கின்றேனாம். அப்படியானால் அவர் கண்டியில் பிச்சையா எடுக்கிறார்?

நிச்சயம் என்னை வெற்றிபெற வைப்பீர்கள். எனது வெற்றியே மலையகத்தின் வெற்றி. மாற்று அணியினரை வெற்றிபெறவைத்தால் அது மலையகத்துக்கு ஏற்படும் தோல்வியாகும்.

மலையக மக்களை காப்பாற்றுவதற்கு யாருமே இல்லையே என குமுறி வருகின்றனர். உங்களை நான் காப்பாற்றுவேன். தோட்டதுரையாக இருந்தாலும் எந்த கொம்பனாக இருந்தாலும் உங்களை சீண்டவிட மாட்டேன். எவருக்கும் பயப்படவேண்டாம்.

கொட்டகலை பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்படவுள்ளது என தெரியவருகின்றது. இதனை தட்டிக்கேட்கமாட்டார்கள். ஆனால், துணைபோவார்கள். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மட்டு. விபத்தில் நால்வர் காயம்




நேற்று மகிழடித்தீவு - கொக்கட்டிச்சோலை பிரதான வீதியில் முச்சக்கர வாகனம் மற்றும் ஒரு கனரக வாகனம் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இவ்விபத்தில் படுகாயமடைந்த நால்வர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தனர்.

விபத்தில் முச்சக்கர வண்டியில் சென்ற நால்வருமே பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர்.

# உனவட்டுன ரயில் நிலையம் மூடப்பட்டது பொறுப்பதிகாரி தனிமைப்படுத்தலுக்கு!

உனவட்டுன ரயில் நிலையப் பொறுப்பதிகாரி கொரோனாத் தொற்றுக்கு உள்ளான ஒருவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த காரணத்தினால் தற்காலிகமாக உனவட்டுன ரயில் நிலையம் மூடப்பட்டுள்ளதாக ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பி.சீ.ஆர். பரிசோதனைகளில் அவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக உனவட்டுன பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

மேலும் தொற்று நீக்கும் நடவடிக்கைகள் உனவட்டுன ரயில் நிலையத்தில் இடம்பெற்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் இருந்து ஹபராதுவ பகுதிக்கு வந்த நபரொருவருக்கு கொரோனா தொற்று உறுதியாகி உள்ளதுடன் குறித்த நபருடன் ரயில் நிலைய பொறுப்பதிகாரி நெருங்கி தொடர்பில் இருந்ததார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் அந்த ரயில் நிலையப் பொறுப்பதிகாரி 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஒரே பழைய பல்லவியையே பாடுகின்றாராம் சம்பந்தன்!



## விமல் வீரவன்ஸ காட்டம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது போலி அரசியலையே நடத்திவருகின்றது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், அமைச்சருமான விமல்வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பு, வெள்ளவத்தை பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறான பொய் அரசியலை நடத்துகின்றது என்பது உங்களுக்கு தெரியும். நான் 2000 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்கு தெரிவாகினேன். 20 வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகின்றேன். இக்காலப்பகுதியில் சம்பந்தன் ஒரே கதையைத்தான் மீண்டும் மீண்டும் கூறிவருகிறார். ஹன்சாட்டை எடுத்துபார்த்தால் தெரியும். உரையில் சிறு மாற்றங்கள் இருக்குமேதவிர கருப்பொருள் என்பது ஒன்றாகவே இருக்கும்.

இவ்வாறு ஒரே பல்லவியை பாடும் சம்பந்தன் திருகோணமலைக்குக் கூடச் செல்லமாட்டார். கடந்த ஆட்சியில் சொகுசுவீடு வழங்கப்பட்டது. ஆனால், வடக்கு மக்களின் வீட்டுப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கவில்லை. ஒரே கதையைக் கூறிக் கொண்டு இன்னும் எவ்வளவுகாலம்தான் பயணிப்பது?

அந்த கதைக்கு வழங்கக்கூடிய தீர்வுதான் என்ன? எனவே, இந்தக் கதையில் இருந்து சம்பந்தன் தரப்பு வெளியில் வரவேண்டும். அனைத்து இன மக்களும் இலங்கையராக வாழக்கூடிய புது கதையை ஆரம்பிக்கமுடியும். இப்படியான கதையே எமக்கு தேவை. அதற்கு உயிர்கொடுக்கவேண்டும். நான் இந்த நாட்டை நேசிக்கின்றேன். அது பிளவுபடுவதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டேன். – என்றார்.

# மட்டு. கிரான் ஊத்துச்சேனையில் சிறுவன் குளத்தில் மூழ்கிச் சாவு!

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஊத்துச்சேனை பிரதேசத்தில் குளத்தில் குளிக்கச் சென்ற சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.

கருணைபுரம் வாழைச்சேனையைச் சேர்ந்த சி.ஜக்ஷன், (வயது 14) என்ற சிறுவனே இவ்வாறு இறந்துள்ளான்.

இன்று காலை வழமை போன்று தமது கிராமத்தில் உள்ள ஊத்துச்சேனை அரக்கல் குளத்தில் குளித்துக்கொண்டிருந்தபோது ஆழமான சேற்றுப் பிரதேசத்தில் கால் புதைந்து உயிரிழந்துள்ளான் என உறவினர்கள் தெரிவிக்கின்றனர். இந்தச் சிறுவன் தமது பாட்டியுடன் வசித்து வந்ததான் எனவும் தெரிவிக்கப்பட்டனர்.

நேற்று சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டிருந்தது.

இந்தப் பிரதேசத்தில் வறட்சியான காலநிலை நிலவுவதால் பிரதேச மக்கள் அனேகமானோர் நீர் உள்ள குளங்களில் குளிப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



# பாதாள உலகத் தலைவர்களின் உதவியாளர்கள் இருவர் கைது

பிரபல பாதாள உலகக் குழு உறுப்பினரான அங்கொட லொக்கா மற்றும் பெத்தியாகொட சங்க ஆகியோரின் உதவியாளர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். முல்லேரியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடுமுல்ல பகுதியில் வைத்து இந்த நபர்கள் இன்று (திங்கட்கிழமை) காலை 5 கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இருவரில் 32 வயதுடைய விதானகமகே கயான் தர்ன எனும் கய்யா என்பவர் அங்கொட லொக்காவின் உதவியாளர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த நபர் 2019ஆம் ஆண்டு ஹங்வெல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் சுமேத எனும் மணல் வியாபாரி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான பிரதான சந்தேக நபர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மற்றொரு நபரான நதீக சேபால தஸநாயக்க எனும் ரன் கேல்ல என்பவர் பெத்தியாகொடவின் உதவியாளர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மரக்கறி வாகனம் விபத்து

வவுனியா, ஜூலை 13

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கி மரக்கறி ஏற்றிக்கொண்டு பயணித்த கப் வாகனம் ஒன்று குடைசாய்ந்ததில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று காலை இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொக்காவில் பகுதியில் ஏ9 வீதியில் இந்த விபத்து பதிவாகியுள்ளது.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதியை விட்டு விலகியதில் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# பெரும் மாயைக்குள் சிக்குகிறது நாடு மீட்பதற்கு மக்கள் எழுச்சி அவசியம்!

## வலியுறுத்துகிறார் அநுரகுமார



நாட்டில்தற்போது அரசியல் எழுச்சி அவசியம் என தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துகிரிய பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

சமூகம் தற்போது மிகப் பெரிய மாயையை நோக்கி அழைத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த மாயைக்கு எதிராகப் போராட்டம் ஒன்றை நடத்த வேண்டியுள்ளது. இது கைவிட முடியாத சமூகப் பொறுப்பாக மாறி வருகிறது.

நாட்டின் முழு அரசியலும் தேசிய ரீதியாக சில குடும்பங்களையும் பிரதேச ரீதியாக சில குடும்பங்களையும் கேந்திரமாகக் கொண்டு அமைந்துள்ளது.

இதனால், நாட்டை புதிய அரசியல் சக்தி கைப்பற்றுவதற்காக புதிய இளையோர் போராட்டம் நடத்த வேண்டும் எனவும் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.07.2020 இல் வெளியிடப்பெற்றது.